ஊரறியாமலே...உண்மைகள் கலங்கும்
ஒரு பெரும் சரித்திரம் ஊமையாய் உறங்கும்
வேருக்கு மட்டுமே விழுதினைப் புரியும்
வெடிமருந்தேற்றிய வேங்கையை தெரியும்...

சாவினை தோள்மீது தாங்கிய காவிய
சந்தன மேனிகளே
சாவினை தோள்மீது தாங்கிய காவிய
சந்தன மேனிகளே
உங்கள் ஆவி கலங்கிய அக்கணப் போதினில்
யாரை நினைத்தீரோ நீங்கள்
யாரை நினைத்தீரோ ..

வாசலில் காற்றென வீசுங்கள்
உங்கள் வாய்திரந்தோர் வார்த்தை
பேசுங்கள் ..
சாவினை தோள்மீது தாங்கிய காவிய

சந்தன மேனிகளே..

வென்றிடவே கரும் வேங்கைகள் ஆகிய
வீரக்கொளுந்துகளே
வென்றிடவே கரும் வேங்கைகள் ஆகிய
வீரக்கொளுந்துகளே
எம்மைக் கொன்றவர் மீதினில்
குண்டெனப் பாய்கையில்
என்ன நினைத்தீரோ ..

வாசலில் காற்றென வீசுங்கள்

உங்கள் வாய்திரந்தோர் வார்த்தை
பேசுங்கள் ..
சாவினை தோள்மீது தாங்கிய காவிய

சந்தன மேனிகளே..

தாயக தாகங்கள் தாங்கிய நெஞ்சினில்
சாவை சுமந்தவரே
தாயக தாகங்கள் தாங்கிய நெஞ்சினில்
சாவை சுமந்தவரே
உங்கள் தே.கங்கள் தீயினில்
வேகின்ற நேரத்தில் யாரை நினைத்தீரோ ..
வாசலில் காற்றென வீசுங்கள்
உங்கள் வாய்திரந்தோர் வார்த்தை
பேசுங்கள் ..
சாவினை தோள்மீது தாங்கிய காவிய

சந்தன மேனிகளே..

தாலாட்டுப் பாடியே தன் முலையூட்டிய
தாயை நினைத்தீரோ
தாலாட்டுப் பாடியே தன் முலையூட்டிய
தாயை நினைத்தீரோ
உங்கள் காலாரத் தோள்மீது தாங்கிய
தந்தையின் கையை நினைத்தீரோ

வாசலில் காற்றென வீசுங்கள்
உங்கள் வாய்திரந்தோர் வார்த்தை
பேசுங்கள் ..

சாவினை தோள்மீது தாங்கிய காவிய

சந்தன மேனிகளே..

நாளும் விடுதலை தீயில் குளித்திடும்
நா.ய.கனை நினைத்தீரோ
நாளும் விடுதலை தீயில் குளித்திடும்
நா.ய.கனை நினைத்தீரோ.
உங்கள் தோளைத் தடவியே
சென்றிடு என்றவன் சோகம் தனைநினைத்தீரோ
வாசலில் காற்றென வீசுங்கள்
உங்கள் வாய்திரந்தோர் வார்த்தை
பேசுங்கள் ..

சாவினை தோள்மீது தாங்கிய காவிய
சந்தன மேனிகளே..
உங்கள் ஆவி கலங்கிய அக்கண போதினில்
யாரை நினைத்தீரோ நீங்கள்
யாரை நினைத்தீரோ ..

நீங்கள் யாரை.. நினைத்தீரோ ..